DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.41/2023**

அ.சா.9

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | இராமையா | Caste: | |
| Father's Name: | குருசாமி | Calling: | சார்பு ஆய்வாளர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 57 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 24.11.2025

( 1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜர்படுத்தப்படவில்லை. அவரது சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் தற்போது முதுகுளத்தூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.06.2023ம் தேதி பரமக்குடி தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று இரவு 8.00மணியளவில் பரமக்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த உரப்புளி முனியாண்டிபுரத்தை சேர்ந்த இராமகிருஷ்ணன் மகன் பாலமுருகன், வயது 28/2023 என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை 8.30மணிக்கு பதிவு செய்து மேற்படி நபரிடம் கையெழுத்து பெற்று பின்பு இரவு 9.30மணிக்கு வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய கு.எண். 141/2023 சட்டப்பிரிவுகள் 109, 294(b), 323 IPC and sec 3(1)(r), 3(1)(s) ofSC/ST (POA) Act ன் கீழ் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.8**. புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையின்

அசலை இந்நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். இதுசம்பந்தமாக காவல்துணைக் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

(2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். )

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-

எத்தனை மணிக்கு அரசு மருத்துவமனையில் இருந்து எனக்கு தகவல் கிடைத்தது என முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் இரண்டு எதிரிகளின் பெயர்களும் அருண்குமார் என்றோ அவர்களின் தகப்பனார் பெயர் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பரமக்குடி காக்காதோப்பிலிருந்து பரமக்குடி தாலுகா காவல்நிலையம் 2கி.மீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். காக்காதோப்பிலிருந்து பரமக்குடி அரசு மருத்துவமனை 4 கி,மீ தொலைவில் இருக்குமா என்றால் இருக்கும். காக்காதோப்பிலிருந்து அரசு மருத்துவமனை செல்லும் வழியில்தான் பரமக்குடி தாலுகா காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். முதன்முதலில் பரமக்குடி தாலுகா காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரினைநான் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பரமக்குடி அரசு மருத்துவமனையில் அ.சா.1 பாலமுருகன் 08.20மணியளவில் கொடுத்த வாக்குமூலத்தையும் நான் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பரமக்குடி தாலுகா காவல்நிலையத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு வருவதற்கு ஒரு மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். இந்த வழக்கின் சம்பவம் என்பது 01.06.2023ம் தேதி 5.00மணிக்கு என்றால் சரிதான். 01.06.2023ம் தேதி இரவு 9.30மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல்

அறிக்கை இந்நீதிமன்றத்திற்கு 02.06.2023 ம் தேதி இரவு 7.40 மணிக்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த காலதாமதத்திற்கு காரணம் பின்னிட்டு காவல்நிலையத்தில் ஆலோசித்து 2ம் எதிரிக்கும் புகார்தாரருக்கும் உள்ள முன்விரோதத்தை வைத்து பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரினால்தான் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நாளில், சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)